**கஹவத்த பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கஹவத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கஹவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட்ட ரூபா 2,265,500 தொகையான 04 அபிவிருத்தி செயற்திட்டங்களின் செலவினங்கள் மற்றும் ரூபா 1,000,000 ஆன காணியொன்று கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையான ரூபா 5,053,041 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் நிதிக்கூற்றின் பிரகாரம் மீதி ஆகியவற்றுக்கிடையே 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாய ரூபா 1,653,164 ஆன வேறுபாடொன்று நிலவியது. | எதிர்காலத்தில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 74,277,172 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கிரயத்தினை உறுதிப்படுத்துவதற்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய பட்டோலையொன்றிளை பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | விரிவான பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 93,175 தொகையான 02 முற்பணங்கள் நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணமொன்றுக்கான விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. ரூபா 20,000 தொகையான முற்பணத்தை தீர்ப்பனவு செய்யுமாறு முன்னாள் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 14 முக்கியமான பணிகளுக்காக சபையினால் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | 16 முக்கிய பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. இடைத் தடுப்புகள் மற்றும் கட்டிட நிர்மாணத் திட்டங்களை பரிசோதித்தல் தொடர்பில் உப விதி மொழிபெயர்ப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,223,912 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,861,704 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,431,325 | 4,264,740 | 4,125,125 | 1,547,410 | 3,862,721 | 3,917,917 | 4,094,813 | 1,423,978 |
| வாடகை | 9,093,792 | 8,477,967 | 7,860,617 | 1,156,849 | 8,890,292 | 6,612,853 | 4,867,451 | 2,378,819 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,035,000 | 1,127,066 | 1,094,466 | - | 1,079,560 | 353,950 | 842,370 | - |
| ஏனைய வருமானங் கள் | 2,617,000 | 1,891,537 | 1,464,743 | - | 2,145,200 | 1,944,027 | 1,743,555 | - |
| | 17,177,117 | 15,761,310 | 14,544,951 | 2,704,259 | 15,977,773 | 12,828,747 | 11,548,189 | 3,802,797 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக ரூபா 329,167 நிலுவை வீதவரித் மீதி மற்றும் ரூபா 23,858 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதி ஆகியவை 03 வருடங்களை விட பழமையானவை ஆகும். | வீதவரியின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக ஆதனங்களை தடை செய்யாதிருக்க சபை தீர்மானித்துள்ளது. தகவல் தேடப்பட்டு ஏக்கர வரி அறவிடப்படும். | நிலுவை வருமானம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிலுவை வாரச் சந்தை கட்டணங்கள் மற்றும் மீன் கடை வாடகை ரூபா 574,320 தொகையும், பொதுச் சந்தையின் கடைகளுக்காக 23 மாதங்களுக்காக நிலுவை வாடகை ரூபா 148,570 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் ரூபா 46,667 தொகை சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவைக்காக மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | -மேற்படி- |
| (இ) | காட்சிபடுத்தப்பட்ட விளம்பரப் பலகைகளுக்காக மதிப்பாய்வொன்று 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படாத காரணத்தால், அறவிடப்பட்ட அந்த கட்டணங்களின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | கொரோனா நிலைமையின் காரணமாக மதிப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் இனங்காணப்பட்டிருந்த 29 கட்டுமானங்கள் தொடர்பில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பிலான பதிவேடொன்றை பேணுவதற்கு மற்றும் அத்துமீறிய கட்டுமானங்களை மேற்கொண்டவர்களுக்கு ஏதேனும் அனுமதிப்பத்திரம் வழங்காதிருக்க சபை அங்கீகரித்துள்ளமை. | அத்துமீறிய கட்டுமானங்கள் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எத்தான பிரதேச சபை நீர் செயற்திட்டத்தின் 30 | புதிய இணைப்புகளை வழங்குவதற்கு நீர் மானிகள் | நீர் மானிகளை பொருத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வாடிக்கையாளர்களின் நீர்மானிகள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயலிழந்து காணப்பட்ட போதிலும், அதற்காக நீர்மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. | பொருத்தப்பட்டதுடன், 100 நீர் மானிகள் கிடைத்த பின்னர் பொருத்துவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஹவுப்பே தோட்டத்தில் குப்பை கொட்டும் சுமார் 04 ஏக்கர்கள் பரப்பளவான காணி சுவீகரிக்கப்படவில்லை. அவ்வாறே, வருடாந்தம் சுமார் 750 மெற்றிக் தொன் அளவான கழிவினை அகற்றுவதற்கு 15 ஊழியர்கள் மற்றும் 06 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றுக்கு ரூபா 11,290,769 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த கழிவுகள் சூழலுக்கு இசைவான முறையில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த காணி விரைவில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மற்றும் கழிவுகளை அகற்றும் நிலத்தை கையகப்படுத்திய பின் கழிவு மறுசுழற்சி திட்டம் தொடங்கப்படும் என்றும். | காணிகளை சுவீகரித்தல் துரிதப்படுத்தப்பட வேண்டியதுடன், திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பழுதுபார்த்தல்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது கைளிக்கப்பட்ட உழவு இயந்திரமொன்று 05 வருட காலமாக கராஜ் ஒன்றில் விளைவற்றுக் காணப்பட்டமையால், என்ஜினை உயிர்ப்பிக்க முடியாத அளவிற்கு விளைவற்று காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது உழவு இயந்திரம் கொண்டுவரப்பட்டது. வாகனத்தின் பழுதுபார்த்தலுக்காக வழங்கப்பட்ட முற்பணத்திளை தீர்ப்பதற்காக நி.பி. 104 இன் கீழ் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டவாறு காணப்பட்டது. | விசாரணைகள் துரிதமாக நிறைவு செய்து பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தீர்மானிக்கப்பட வேண்டும். |

### 3.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரித்தற்ற 08 வாகனங்களின் உரித்தினை சுவீகரிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 05 வாகனங்கள் கைத்தவிர்க்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை சாட்டுவதற்கு கடிதங்கள் கையளிக்கப்பட்டு பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், பிரச்சினைகளை தீர்த்து கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |